මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka


මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

LAE\2023\ **42**

2023.03.07

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(3) ஆம் உப பிரிவின் கீழான கட்டளை**

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 38(1)(இ) ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கான மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வெளியிடப்பட்ட 2317/02 தொடக்கம் 2317/26 ஆம் இலக்கம் வரையான, 2023.01.30 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அவ்வட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் 2023 மார்ச்சு மாதம் 09 ஆம் திகதி நடைபெற மாட்டாது.

வாக்குச் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணியும் தேர்தல்கள் சம்பந்தமான ஏனைய வசதிகள் சம்பந்தமாக எழுந்த எதிர்பாராத, தவிர்க்கமுடியாத விடயங்களும் காரணமாக சொல்லப்பட்ட தேர்தலை 2023.03.09 ஆம் திகதியில் நடாத்த முடியாதுள்ளதென்றும், சொல்லப்பட்ட தேர்தலை நடாத்துவதற்கு ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதி மிகவும் பொருத்தமானதென்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 38(1)(இ) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அக்கட்டளைச்சட்டத்தின் 38(3) ஆம் உப பிரிவின் கீழ் சொல்லப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான புதிய தேர்தல் திகதியாக 2023 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதி ஒவ்வொரு மாவட்டத்திற்கான மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அறிவித்தல் கொடுக்கப்படும்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்